**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

****************

**ஊடக அறிக்கை**

## பேராதனை பல்கலைக் கழகத்தின் ஆய்வு மாநாட்டில் இந்திய உயர்ஸ்தானிகர் உரையாற்றினார்.

## அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் அதி வணக்கத்துக்குரிய மஹாநாயக்க தேரர்களையும் உயர்ஸ்தானிகர் சந்தித்தார்.

பேராதனை பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானத்துறைசார் பட்டப்பின் கற்கைகள் நிலைய (PGIS) வருடாந்த ஆய்வு மாநாட்டில் (RESCON2019) இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து பிரதம விருந்தினராக கலந்து கொண்டார் . இந்த நிகழ்வில் அப்பல்கலைக் கழகத்தின் பிரதி துணைவேந்தர் பேராசிரியர் பராக்ரம கருணாரத்ன கௌரவ விருந்தினராக கலந்துகொண்ட அதேசமயம் நியூயோர்க் சிட்டி பல்கலை கழகத்தின் பேராசிரியர் அலன் லியோன் சிறப்புரை நிகழ்த்தினார். 200 க்கும் அதிகமான ஆய்வாளர்கள், பீட மற்றும் கல்வித்துறைசார் புலமையாளர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்த இந்திய உயர் ஸ்தானிகர் சந்து இலங்கை மற்றும் இந்தியாவின் உயர் மட்டத்திலான விஞ்ஞான பாரம்பரியத்தை சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துறையில் இந்தியாவின் அண்மைய முன்னேற்றங்கள் குறித்து இங்கு குறிப்பிட்டிருந்த அவர் இந்தியாவில் உள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறைகளில் இலங்கையை சேர்ந்த புலமையாளர்களுக்கு காணப்படும் வாய்ப்புக்கள் குறித்தும் தெளிவுபடுத்தினார். இலங்கையுடன் இந்தியா என்றும் இணைந்திருக்கும் என்பதனை இந்த சந்தர்ப்பத்தில் நினைவூட்டியிருந்த அவர் 2019 ஜூனில் இந்திய பிரதமர் நரேந்திர

மோடியின் இலங்கைக்கான விஜயத்தினை அடுத்து இலங்கைக்கு வருகைதரும் இந்திய சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அச்சந்தையில் இரண்டாம் இடத்திலிருந்து மூன்று மடங்காக உயர்வடைந்தது எனவும் தெரிவித்திருந்தார் . பிரதித் துணைவேந்தர் தனதுரையில் பேராதனை பல்கலைக்கழகம் இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதற்கு பாராட்டுக்களை தெரிவித்திருந்ததுடன் இந்தியாவின் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ( ITEC) நிகழ்ச்சித்திட்டத்தில் அப்பல்கலைக்கழகம் பங்குபற்றிவருவதனையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

2. அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் அதி வணக்கத்துக்குரிய மஹாநாயக்க தேர்ர்களிடமிருந்து இந்திய உயர்ஸ்தானிகர் ஆசிர்வாதங்களை பெற்றிருந்தார். அத்துடன் கண்டி ஸ்ரீ தலதா மாளிகையிலும் அவர் வழிபட்டிருந்தார்.

*****************

கொழும்பு

11 ஒக்டோபர் 2019